செ.வெ.எண்: 551 நாள்: 28.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**காணொலிக்காட்சி வாயிலாக விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் காணொலிக்காட்சி வாயிலாக விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (28.09.2021) நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் குறைகளை தீர்க்கும் வகையில் இன்றையதினம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கோவிட் தொற்று காரணமாக காணொலிக்காட்சி வாயிலாக நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்த விவசாயம் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் வேளாண்மையை முன்னேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். இதன்படி தமிழ்நாட்டில் கூடுதலாக 11.75 இலட்சம் எக்டர் பயிரிடச் செய்து தற்போதுள்ள நிகர சாகுபடிப் பரப்பான 60 விழுக்காடு 75 விழுக்காடாக உயர்த்துதல். 10 இலட்சம் எக்டர் என்ற அளவுக்கு உள்ள இருபோக சாகுபடி நிலங்கள் அடுத்த பத்தாண்டுகளுக்குள் இருமடங்காக, அதாவது 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல், உணவு தானியங்கள் மற்றும் தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு ஆகிய பணப்பயிர்களுக்கான வேளாண் ஆக்கத்திறனில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகம் இடம்பிடித்தலுக்கான திட்டம் ஆகியவை அறிவிக்கப்பட்டுள்ளன.

உணவு தானிய உற்பத்தியை பொருத்தவரை உணவு தானிய உற்பத்தி இயக்கம் 2021-22ஆம் ஆண்டில் மாநில அளவில் 37.50 இலட்சம் எக்டருக்கு 125 இலட்சம் மெ.டன் உற்பத்தியும், மாவட்ட அளவில் நெற்பயிரில் 80,500 எக்டர், சிறுதானியங்களில் 5,100 எக்டர் மற்றும் பயறு வகைகளில் 5,600 எக்டர் ஆக மொத்தம் 91,200 எக்டர் பரப்பும், நெற்பயிரில் 2,47,980 மெ.டன்னும், சிறுதானியங்களில் 40,200 மெ.டன்னும் மற்றும் பயறு வகைகளில் 5,150 மெ.டன்னும் ஆக மொத்தம் 2 இலட்சத்து 93 ஆயிரத்து 330 மெ.டன் உற்பத்தி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உணவு தானிய உற்பத்தி இலக்கீட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தின் பங்களிப்பு 2.35 சதவீதமாகும்.

மழையளவை பொருத்தவரை புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழையளவு 754.66 மி.மீ. ஆகும். செப்டம்பர் மாதம் வரை பெறப்பட வேண்டிய இயல்பான மழையளவான 393.64 மி.மீ. -க்கு பதிலாக 589 மி.மீ. அளவு மழை பெறப்பட்டுள்ளது. இது இயல்பான மழையளவைவிட 49.7 சதவீதம் கூடுதலாகும். செப்டம்பர் மாதத்தில் பெறப்பட வேண்டிய இயல்பான மழையளவு 97.99 மி.மீ.-க்கு பதிலாக 145 மி.மீ இதுவரை பதிவாகியுள்ளது.

பயிர்ச் சாகுபடியை பொருத்தவரை 2021-22 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் முடிய நெல் 8,021 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 982 எக்டர் பரப்பளவிலும், பயறுவகைப் பயிர்கள் 936 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்து 5,320 எக்டர் பரப்பிலும், கரும்பு 1,434 எக்டர் பரப்பளவிலும், பருத்தி 14 எக்டர் பரப்பளவிலும், தென்னை 11,625 எக்டர் பரப்பளவிலும் எண்ணெய்பனை 34 எக்டர் பரப்பளவிலும் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

இடுபொருட்கள் இருப்பை பொருத்தவரை புதுகோட்டை மாவட்டத்தில் உள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 292.756 மெ.டன் சான்று பெற்ற நெல் விதைகளும், 16.726 மெ.டன் பயறு விதைகளும், 8.671 மெ.டன் நிலக்கடலை விதைகளும், 1.050 மெ.டன் சிறுதானிய விதைகளும், 4.248 மெ.டன் எள் விதைகளும் இருப்பில் உள்ளன.

விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்றுச் சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விதை விற்பனை உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் விநியோகம் செய்திடத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உர இருப்பை பொருத்தவரை விவசாயிகளுக்குத் தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 3,431 மெ.டன்னும், டிஏபி 984 மெ.டன்னும், பொட்டாஷ் 932 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 2,821 மெ.டன்னும் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் உர உரிமம் பெற்ற தனியார் நிறுவனங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கத்தில் 701 மெ.டன் யூரியா, 356 மெ.டன் டிஏபி, 282 மெ.டன் பொட்டாஷ், 548 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

விவசாயிகள் உரம் வாங்க செல்லும் பொழுது கட்டாயமாக ஆதார் அட்டை கொண்டு சென்று தங்களது கை ரேகையினை பதிவு செய்து உரம் வாங்கிடவும், மண்வள அட்டையில் பரிந்துரை செய்துள்ள உர அளவினை வாங்கி பயன்பெறுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எனவே தமிழக அரசின் இதுபோன்ற வேளாண்

நலத்திட்டங்களை விவசாயிகள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, வேளாண் இணை இயக்குநர் இராம.சிவக்குமார், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் எம்.சம்பத், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கணேசன், துணை இயக்குநர்கள் இராஜேந்திரன், கனகராஜ், கஜலெட்சுமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் உமாமகேஸ்வரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ரமேஷ் மற்றும் 13 வட்டாரங்களில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து விவசாயிகள் காணொலிக்காட்சி வாயிலாக கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**